இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 309 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 05 – புதன்கிழமை 19 ஜூன் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 309 : Thiruvalluvar Year - 2055 - Aani 05 - Wednesday 19 June 2024 - Chennai 12 Pages ₹ 5.00


### முத்தமிழறிஞர் கலைஞரின் கைவண்ணத்தில் உருவாகி தொலைக்காட்சித் தொடராக மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற

# ‘இராமானுஜர் - மதத்தில் புரட்சி செய்த மகான்’ நூலாக்கம்!

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.06.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான “இராமானுஜர் – மதத்தில் புரட்சி செய்த மகான்” என்ற தொலைக்காட்சி தொடரினை அனைத்துத் தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவு வாயிலாக நூலாக்கம் செய்யப்பட்ட “இராமானுஜர்” எனும் நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆழ்வார்திருநகரி, எம்பெருமானார் ஜீயர் மடம், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ரெங்கராமானுஜ ஜீயர் சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீஎம்பார் ஜீயர் மடம், ஸ்ரீஸ்ரீஸ்ரீ அப்பன் உலகாரிய இராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஜீயர் மடம், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், “இராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான்” தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பாளர் திருமதி குட்டி பத்மினி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூன் 19 -**

**“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான ‘இராமானுஜர் - மதத்தில் புரட்சி செய்த மகான்’ தொலைக் காட்சித் தொடர் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நூலாக்கம் செய்யப்பட்டது. இந்த நூலாக்கத்தினை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.06.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான “இராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான்” என்ற தொலைக்காட்சி தொடரினை அனைத்துத் தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவு வாயிலாக நூலாக்கம் செய்யப்பட்ட “இராமானுஜர்“ எனும் நூலினை வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், அரிய பக்தி நூல்களை மறுபதிப்பு செய்து புதுப்பொலிவுடன் நூலாக்கம் செய்திடும் வகையில் புதிதாக பதிப்பகப் பிரிவு தொடங்கப்பட்டு, இரண்டு கட்டங்களாக 216 அரிய பக்தி நூல்கள் வெளியிடப்பட்டன.

### ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வகுத்தளிக்கப்பட்டது!

வைணவ சமய முன்னோடியாக திகழ்ந்த இராமானுஜர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் 1017ம் ஆண்டு சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்து ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், திருப்பதி, மேலக்கோட்டை, திருநாராயணபுரம் போன்ற திவ்ய தேசங்களில் வாழ்ந்து ஆன்மிகப் பணிகளையும், சமயசீர்திருத்தங்களையும் செய்திட்ட சமய முன்னோடியாவார். மேலும், வைணவத்தை வளர்க்க விசிஷ்டாத்வைதம் என்ற கோட்பாட்டையும், திருக்கோயில் வழிபாட்டுக் கோட்பாடுகளையும் உருவாக்கியதோடு அன்றாட பூசை நடைமுறைகள் குறித்தும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வகுத்தளித்து சிறப்பு சேர்த்துள்ளார்.

### 433 அத்தியாயங்களாக ஒளிபரப்பானது!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இராமானுஜரின் வரலாற்றையும், இந்து மதத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும் எடுத்துக் கூறும் விதமாக “இராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான்” என்ற தொலைக்காட்சித் தொடரினை எழுதினார்கள். இத்தொடர் கலைஞர் தொலைக்காட்சியில் 433 அத்தியாயங்களாக ஒளிபரப்பாகி மிகுந்த வரவேற்பை பெற்றது.

தொலைக்காட்சி தொடராக ஒளிபரப்பான இராமானுஜரின் வரலாற்றை அனைத்துத் தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில், இந்து சமய அறநிலையத் துறையின் பதிப்பகப் பிரிவு “இராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான்” எனும் தலைப்பில் நூலாக்கம் செய்துள்ளது. இந்நூலினை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, இந்துசமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி. சிவம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆழ்வார்திருநகரி, எம்பெருமானார் ஜீயர் மடம், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ரெங்கராமானுஜ ஜீயர் சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீஎம்பார் ஜீயர் மடம், ஸ்ரீஸ்ரீஸ்ரீ அப்பன் உலகாரிய இராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஜீயர் மடம், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், “இராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான்” தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பாளர் திருமதி குட்டி பத்மினி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மருத்துவ மாணவர்கள் தவறு இழைப்பது சமூகத்திற்கு ஆபத்து!

# ‘நீட்’ தேர்வில் தவறு நடந்திருந்தால் அதனை ஒப்புக் கொள்ளுங்கள்!

## ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்!

*புதுடெல்லி, ஜூன் 19 -*

*நீட் தேர்வில் தவறு நடந்திருந்தால், அதனை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.*

*இந்த ஆண்டு நடந்து முடிந்த நீட் நுழைவுத் தேர்வில் பல்வேறு குளறுபடிகளும், வினாத்தாள் கசிவு, ஆள் மாறாட்டம் போன்ற முறைகேடுகளும் அரங்கேறின. இதனால், மருத்துவ கனவுகளோடு உள்ள லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்நிலையில், நீட் நுழைவுத் தேர்வுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நீட் நுழைவுத் தேர்வு முறைகேட்டுக்கு எதிராக உச்சநீதி மன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன. நேற்று முன்தினம் தொடரப்பட்ட மேலும் ஒரு வழக்கு நீதிபதிகள் விக்ரம்நாத், எஸ்.வி. என்.பட்டி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நீட் தேர்வில் தவறு நடந்திருந்தால், அதனை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் நீதிபதிகள் அறிவுறுத்தினர்.*

*மருத்துவம் படிக்கும் மாணவர்களே தவறு இழைப்பது சமூகத்துக்கு ஆபத்து என்றும் நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர். 0.1% தவறு நடந்திருந்தாலும் அதனை முழுமையாக விசாரிக்க வேண்டும் என்றும், ஒரு நபர் தவறு செய்திருந்தாலும், அது ஒட்டு மொத்த சிஸ்டத்துக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். நீட் முறைகேடு தொடர்பாக இதுவரை நடைபெற்ற விசாரணை விபரங்கள் என்ன என்பதை அடுத்த விசாரணையின் போது நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.*

*தேசிய தேர்வு முகமையிடமிருந்து உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையை எதிர் பார்க்கிறோம் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.*

*நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக தேசிய தேர்வு முகமையும், ஒன்றிய அரசும் 2 வாரங்களில் பதிலளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பி நீதிபதிகள் உத்தரவிட்டனர். நீட் தேர்வுக்காக மாணவர்கள் மேற்கொள்ளும் கடின உழைப்பை புரிந்து கொண்டுள்ளோம் என்று தெரிவித்த நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூலை 8 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.*

### தமிழ்நாட்டின் வரலாற்றில் புதிய வெளிச்சம்!

# கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூன் 19 -**

**கீழடி மற்றும் அதன் அருகிலுள்ள தொல்லியல் தளமான கொந்தகை, வெம்பக்கோட்டை, கீழ்நமண்டி, பொற்பனைக்கோட்டை, திருமலாபுரம், சென்னானூர், கொங்கல்நகரம் மற்றும் மருங்கூர் ஆகிய எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் 2024ஆம் ஆண்டிற்கான அகழாய்வுப் பணிகளின் தொடக்கமாக சிவகங்கை மாவட்டம் கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியான கொந்தகை, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டி, புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டை, தென்காசி மாவட்டம் திருமலாபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னானூர், திருப்பூர் மாவட்டம் கொங்கல்நகரம் மற்றும் கடலூர் மாவட்டம் மருங்கூர் ஆகிய எட்டு இடங்களில் அகழாய்வுப் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு 15 இலட்சம் ஆண்டுகள் மனிதகுல வரலாற்றுத் தொன்மை கொண்ட நிலப்பரப்பாகும். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வு முடிவுகள் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றில் புதிய வெளிச்சம் ஏற்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வு, தொல்லியலாளர்கள் இடையே மட்டுமின்றி உலகத் தமிழர்கள் இடையேயும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்ச் சமூகமானது, கி.மு. ஆறாம் நூற்றாண்டில் படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கரிமப் பகுப்பாய்வுகளின் முடிவுகள் வாயிலாக உறுதியாக நிலைநிறுத்தியுள்ளது. பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற நெல் உமியினை பகுப்பாய்வு செய்ததன் வாயிலாக உறுதி செய்ய முடிகிறது.

அதேபோன்று, கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறை அகழாய்வில் பெறப்பட்ட இரண்டு Accelerator Mass Spectrometry (AMS) காலக் கணிப்பு முடிவுகள் வாயிலாக தமிழ் நாட்டில் இரும்பு 4200 ஆண்டுகளுக்கு முன்னதாக அறிமுகப்படுத்தப் பட்டது உறுதி செய்ய முடிகிறது.

அண்மைக்கால தொல்லியல் சாதனைகள் மூலம் நமது புகழ்பெற்ற, நீண்ட வரலாற்றில் காணும் பண்பாடு மற்றும் கால வரிசை இடைவெளிகளை

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## தமிழ்நாட்டில் கனமழை!

சென்னை, ஜூன் 19 –

தமிழ்நாட்டில் 22ம் தேதி முதல் 5 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை இன்று பெய்யக்கூடும்.

20.06.2024 மற்றும் 21.06.2024 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் 22.06.2024 அன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.